***என்னுடைய சிறிய அனுபவத்திலிருந்து*............ “வேதத்தை தியானியுங்கள் (1)”**

“உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.”
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: யோவான் 1:9)

இவ்வுலக வாழ்க்கைக்குப்பிறகு நமது ஆத்மா இறைவனோடு ஐக்கியப்பட,
மெய்யான ஒளியாகிய ஆண்டவரே நமது ரூபத்திலே வந்து வழியை ஏற்படுத்தி.
இன்றும் நம்மத்தியிலே வார்த்தையாக ஜீவிக்கிறார்.

தயவுசெய்து வேதாகமத்தை (பைபிள்) வேற்றுமத புத்தகமாக பார்க்காமல்,
கடவுளின் வார்த்தை என்பதை கருத்தில் கொண்டு வாசித்து, சிந்தித்து தியானியுங்கள்.

இன்றைய நவீன கம்யூட்டர் வளர்ச்சின் மூலமாக, பல வழிகளிலே இந்த வேதாகமத்தை ஆராய்ந்து அறிய மிகவும் அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன.

பல்வேறு வகையான வேத விளக்கங்கள் இருக்கும் இந்த சூழ்நிலையில், அனைத்தையும் நீங்கள் வாசிக்கும்போது குழப்பமடையாமல், மிகவும் பிரதானமாக நீங்களே வேத வசனத்தை வாசித்து, நீங்களும் ஆண்டவரும் என்ற ஐக்கியத்தோடு சிந்தித்து தியானியுங்கள். ஆலோசனையில் ஆச்சரியமானவர் உங்களுக்கு ஆலோசனை கொடுத்தருளுவார்.

தினமும் படிக்கக்கூடிய வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.
எவ்வளவு நேரம் என்பது முக்கியமல்ல. தினமும் என்பது முக்கியம்.
*ஆரம்பமாக.......*
ஒரு நாளை ஆரம்பிக்கும்போது, கடவுள் வழிபாடு என்பது வேதவாசிப்போடு இருக்கட்டும்.
வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில், பக்கம் 9ல் உள்ள மத்தேயு 6ம் அதிகாரம் வசனம் 9 முதல் 13வரை வாசித்து, அன்றைய தினத்தைக் குறித்து கடவுளிடம் வேண்டி அந்த நாளை ஆரம்பியுங்கள்.
அந்த நாளின் இறுதியில், படுக்கச்செல்லுமுன், கடவுளுக்கு அன்றைய நாளுக்கு நன்றிசொல்லி, வேதாகத்தில் பழைய ஏற்பாட்டில், பக்கம் 733ல் உள்ள சங்கீதம் 103ம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களை வாசித்து, சமாதானத்தோடு அன்றைய தினத்தை நிறைவுசெய்யுங்கள்.

நாளின் தொடக்கம், இறுதி.... இந்த இரண்டு காலக்கட்டத்திலும் உங்களுக்கு இன்னும் கொஞ்ச நேரம் இருக்கும் என்றால்..... வேதத்தை தொடர்ச்சியாக வாசித்து அறிய ஆரம்பியுங்கள்.
அந்த நேரம் 5 நிமிடமோ, 15 நிமிடமோ, 30 நிமிடமோ, 1 மணிநேரமோ உங்கள் வசதி, விருப்பத்தைப் பொருத்தது. அப்படி இந்த இரண்டு காலக்கட்டத்திலும் நேரமில்லையென்றால்...... இடைப்பட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை இதற்காக நீங்கள் ஒதுக்கி வேதத்தை தொடர்ச்சியாக படிக்க முயற்சி செய்யுங்கள்.
இதற்கு ஆரம்பமாக, புதிய ஏற்பாட்டில் முதல் 4 புத்தகங்கள்......
மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற இந்த 4 புத்தககங்களையும்
தொடர்ச்சியாக தினமும் வாசிக்க ஆரம்பியுங்கள்.
ஒரு Book Markஐ பயன்படுத்தி தொடர்ச்சியாக படியுங்கள்.

மிகவும் நிதானமாக, சிந்தனையோடும் தியானத்தோடும் வாசியுங்கள்.
தேவையானால் வாசித்ததையே ஒரு தடவைக்கு மேலும் வாசிக்கலாம்.
அதிக வசனங்கள் வாசிப்பதைவிட கொஞ்ச வசனங்களானாலும்
வாசித்ததை சிந்தித்து தியானிப்பது மிகவும் சிறப்பாகும்.

ஜெபத்துடனும், வாஞ்சையுடனும் நீங்கள் ஆண்டவருடைய வசனத்தை அறிவதிலே வளர
எல்லாம் வல்ல ஆண்டவர் உங்களை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.

“உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.”
(வேதாகமம்: புதிய ஏற்பாடு: யோவான் 1:9)